**<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**

**<u>அவசரக் கூட்டம்</u>**

**24.03.2023 தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.2–ல் அம்பேத்கார் தெருவில் உள்ள பொது கழிவறையின் நச்சுத் தொட்டி (Septic Tank) மேற்கூரை முழுவதும் பழுதடைந்து இடிந்து விட்டது. மேலும் இதனை உடனடியாக சரிசெய்வதற்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்: 9249/2022/இ1** | **தீர்மானம் எண்.523**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் வசித்து வரும் திருநங்கைகள் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பொள்ளாச்சி அண்ணா பேருந்து நிலையத்தில் சிறிய உணவு விற்பனை மையம் ஒன்றை அமைக்க இட ஒதுக்கீடு 'மழைச்சாரல் திருநங்கைகள் சுய உதவி குழுவின்' சார்பாக கல்கி சுப்பிரமணியம் என்பவர் கேட்டுக்கொண்டதன்படி, நகர்சார் ஆய்வர் 21.06.2022 குறிப்பின் அடிப்படையில் நகரமைப்பு அலுவலர் அண்ணா பேருந்து நிலையத்தின் வடக்கு பகுதியில் 10x10 என்ற அளவில் காலியிடம் வழங்க 21.06.2022 அன்று குறிப்பு வழங்கியுள்ளார். அதன்படி, அரசு வழிகாட்டு மதிப்பின்படி வாடகை தொகையை நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பார்வையிட்டு பரிசீலித்து வாடகை தொகையை முடிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.2172/2022/ஜி1 (அ6)** | **தீர்மானம் எண்.524**<br>**பரிசீலிக்கப்பட்டது. நமது அரசின் கொள்கையின்படி திருநங்கைகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட சம்பந்தப்பட்ட இடத்தை சிறிய உணவகம் நடத்திட கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலும், அரிமா சங்கம் (பொள்ளாச்சி) இதற்கான அடிப்படை வசதிகள் செய்வதாலும் சிறப்பினமாக குறைந்தபட்ச மாத வாடகை ரூ.5000 (ஐந்தாயிரம்) மட்டும் நிர்ணயம் செய்து அதற்கான உரிய அனுமதி பெறவும் தீர்மானிக்கப்பட்டது.**<br>**துணைத் தலைவரால் மட்டும் ஆட்சேபனை தெரிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 3 | தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம், பொள்ளாச்சி மீன்விற்பனை பிரிவின் கீழ் 20x15 சதுர அடி அளவுள்ள நவீன மீன்விற்பனை அங்காடி அமைத்திட பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பின்வரும் இரு இடங்களை வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தரும்படி உதவி மேலாளர், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம், பொள்ளாச்சி அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. எனவே இது அரசு நிறுவனம் என்பதனால் அரசு வழிகாட்டு மதிப்பின்படி வாடகை தொகையை நிர்ணயம் செய்திட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>1. திரு.வி.க மார்க்கெட் அருகில் உள்ள காலியிடம்–20x15=300சதுர அடி<br>2. காந்தி மார்க்கெட் அருகிலுள்ள காலியிடம் – 20x15=300 சதுர அடி<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பார்வையிட்டு பரிசீலித்து வாடகை தொகையை முடிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.131/2020/ஜி1 (அ6)** | **தீர்மானம் எண்.525**<br>**பரிசீலிக்கப்பட்டது**<br>**மாத வாடகை ரூ.**<br>**திரு.வி.க. மார்க்கெட் அருகில் உள்ள 300 ச.அ காலியிடம் – 9000/–**<br>**காந்தி மார்க்கெட் அருகில் உள்ள 300 ச.அ காலியிடம் – 7500/–**<br>**மேற்கண்ட நிறுவனம் அரசு நிறுவனம் என்பதால் மேற்கண்ட வாடகை நிர்ணயம் செய்தும் உரிய அனுமதி பெறவும் தீர்மானிக்கப்பட்டது.**<br>**துணைத் தலைவரால் மட்டும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**